தினத்தந்தி
சென்னை 19-2-202

### தேசிய சீனியர் பால்பேட்மிண்டன்:

# இரட்டையர் பிரிவில் தமிழக அணி வெற்றி

சென்னை, பிப்.19-

65-வது தேசிய சீனியர் பால்பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி சென்னை சோழிங்கநல்லூரில் உள்ள செயின்ட் ஜோசப்ஸ் என்ஜினீயரிங் கல்லூரி மைதானத்தில் நடந்து வருகிறது. இதில் முதல் நாளில் நடந்த பெண்களுக்கான 5 பேர் போட்டியில் ஒடிசா அணி 35-21, 35-14 என்ற நேர்செட்டில் குஜராத்தை தோற்கடித்தது. மற்ற ஆட்டங்களில் மேற்கு வங்காளம், மணிப்பூர், இஸ்ரோ அணிகள் வெற்றி பெற்றன. ஆண்கள் இரட்டையர் பிரிவில் தமிழக அணி 35-28, 35-30 என்ற நேர்செட்டில் கர்நாடகாவை தோற்கடித்தது. மற்றொரு ஆட்டத்தில் ஆந்திரா அணி 35-26, 35-27 என்ற நேர்செட்டில் மராட்டியத்தை வென்றது.

190220